ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2240/26 – 2021 අගෝස්තු මස 12 වැනි බ්‍රහස්පතින්දා – 2021.08.12
**2240/26 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை**
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2021 ஆம் ஆண்டின் 153 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/11/2014/FH/279.
பிர. செய. குறிப்பு இல. : BER/4/5/2/64.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, மே 11.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பேருவளை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், மருதானை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.02.28 ஆந் திகதிய முதற் சுவட்டு வரைபட இல. KA/BRW/14/625 இல் களப் புத்தகத்தின் க5316 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு இல. 1 - லிந்தமுல்லவத்தை, உடமுல்லவத்தை - விஸ்தீரணம் : 0.0261 ஹெக்டயார்**
வடக்கு : மருதானை மீன்பிடி துறைமுகம் ; கிழக்கு : வீதி ; தெற்கு : துண்டு இல. 2 ; மேற்கு : கடற்கரை.

02. **துண்டு இல. 2 - லிந்தமுல்லவத்தை, உடமுல்லவத்தை - விஸ்தீரணம் : 0.0076 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இல. 1 ; கிழக்கு : வீதி ; தெற்கு: துண்டு இல. 3; மேற்கு : கடற்கரை.

**03. துண்டு இல. 3 - லிந்தமுல்லவத்தை, உடமுல்ல வத்தை - விஸ்தீரணம் : 0.0426 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 2 ; கிழக்கு : வீதி ; தெற்கு: உரிமை கோருபவர் தெரியாத லிந்தமுல்லவத்தை; மேற்கு : கடற்கரை.

08-392

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் (அ)வின் கீழான கட்டளை

**2021 ஆம் ஆண்டின் 155 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 03J/80/E/794.
பிர. செய. குறிப்பு இல. 3/3/4/1 (දී.ප. අ. 3/62/667).

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத் தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, யூலை 26.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், குளியாப்பிட்டிய கிழக்கு.

**2. காணியின் விபரம்** : வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், மெத்தெகெட்டிய கோரளை சிறுபிரிவில், கஹட்டகஹமட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1986.03.21 ஆந் திகதிய முதற் சுவட்டு வரைபட இல. 1340 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 1 - தங்கஹமுலவத்தை - விஸ்தீரணம் : 0.340 ஹெக்டயார்**

வடக்கு : பாசல் வத்தை மதீனா வித்தியாலயம் ; கிழக்கு : தங்கஹமுல்லவத்தை மஸ்ஜூல் ஜலால் முஸ்லீம் பள்ளிவாசல் காணி; தெற்கு : மக்குல்லகஹமுல வத்தை ; மேற்கு : கஹட்டகஹமட இஹலவெல, மக்குல்லகஹமுல வத்தை.

08-393

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை

**2021 ஆம் ஆண்டின் 156 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/18/2019/WS/525.
பிர. செய. குறிப்பு இல. 3/2/1/143.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணியை அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட சேவகத்தின் உரிமையினை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 06.

**அட்டவணை**

**1. காணியின் விபரம்** : மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், மினுவங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 125/2, மினுவங்கொடை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மெடேமுல்லை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.09.04 ஆந் திகதிய முதற் சுவட்டு வரைபட இல. GA/MIN/2020/343 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகள் :

**2. சேவக உரித்தின் விபரம்** : கம்பஹா அத்தனகல்லை மற்றும் மினுவாங்கொட இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் மினுவாங்கொட அலுவலக பொறுப்பாளர் அலுவலர் காணிக்கு பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்காக உத்தேசித்த காணித்துண்டின் சேவக உரித்தினை எடுத்துக் கொள்ளல்.

**01. துண்டு இல. A - கொன்கஹவத்தை அல்லது கொன் கஹவத்தே கெபெல்ல - விஸ்தீரணம் : 0.0254 ஹெக்டயார்**

வடக்கு : கால்வாயுடன் பிரிக்கப்பட்ட காணி மற்றும் வெட்டப்பட்ட வடிகால் ; கிழக்கு : கால்வாயுடன் பிரிக்கப்பட்ட காணி மற்றும் வெட்டப்பட்ட வடிகால் மற்றும் வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் இக் காணியின் எஞ்சிய பகுதி; மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் முதற்சுவட்டு வரைபட இல. GA/MIN/2020/342.

08-394

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.